செ.வெ.எண் : 04 நாள்:02.08.2021

# பத்திரிக்கைச் செய்தி

## கொரோனா தொற்று பாதுகாப்பு நடைமுறைகள் கடைபிடிப்பது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் வணிகர் சங்க பிரதிநிதிகளுடனான ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

******************

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் இன்று (02.08.2021) கொரோனா தொற்று பாதுகாப்பு நடைமுறைகள் கடைபிடிப்பது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் வணிகர் சங்க பிரதிநிதிகளுடனான ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநகராட்சி ஆணையாளர் திரு.ராஜ கோபால் சுன்கரா இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.லீலா அலெக்ஸ், உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி.சரண்யா இ.ஆ.ப., மற்றும் வணிகர் சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் அதிகரித்து வரும் கொரோன தொற்றினை கட்டுப்படுத்தும் நோக்கில், ஏற்கனவே நடைமுறையில் உள்ள சில கட்டுப்பாடுகளுடன், 03.08.2021 முதல் கீழ்காணும் கட்டுப்பாடுகள் மாவட்டம் முழுவதும் விதிக்கப்படுகின்றது.

- கோயம்புத்தூர் மாவட்டத்தில் செயல்படும் அனைத்து மளிகைகடைகள், காய்கறிகடைகள், அடுமனைகள் (Bakery) மற்றும் டீ-கடைகள் காலை 6 மணிமுதல் மாலை 5 மணி வரை மட்டும் செயல்பட அனுமதிக்கப்படுகிறது.
- மீன் மற்றும் இறைச்சிக்கடைகள், காலை 6 மணிமுதல் மதியம் 2 மணி வரை மட்டும் செயல்பட அனுமதிக்கப்படுகிறது.
- கோயம்புத்தூர் மாவட்டத்தில் செயல்படும் அனைத்து மதுபானகடைகள் (டாஸ்மாக்) காலை 10 மணிமுதல் மாலை 5 மணி வரை மட்டும் செயல்பட அனுமதிக்கப்படுகிறது.

- கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து சுற்றுலாதளங்கள் மற்றும் அருங்காட்சியகங்களில் சுற்றுலாபயணிகள் மற்றும் பொதுமக்கள் வருகைக்கு தடை விதிக்கப்படுகிறது.
- அனைத்து பூங்காக்களும் ஞாயிற்றுக்கிழமை மட்டும் பொதுமக்கள் வருகைக்கு தடை விதிக்கப்படுகிறது.
- மாவட்டத்தில் உள்ள அனைத்து மால்கள் மற்றும் பன்னடுக்கு வணிக வளாகங்கள் (Shopping Malls)ஞாயிற்றுக்கிழமை இயங்க தடை விதிக்கப்படுகிறது. மேலும் மால்களில் உள்ள உணவகங்களுக்கு ஏற்கனவே 31.07.2021 அன்று அறிவிக்கப்பட்ட நடைமுறைகள் பொருந்தும்.
- மேலும், பொள்ளாச்சி மாட்டு சந்தை 04.08.2021 அன்று முதல் இயங்க தடைவிதிக்கப்படுகிறது.

கொரோன வைரஸ் தொற்றினை கட்டுப்படுத்திடும் நோக்கில் மாவட்ட நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்டு அனைத்து நடவடிக்கைகளுக்கும் பொதுமக்கள் அனைவரும் முறையாக பின்பற்றி மாவட்ட நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு அளித்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**